# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்

# Jaffna National College of Education - News letter




# குருதீபம்

## குරුදීපම්

## Gurutheepam

யூன் - 2019

இதழ் - 02

**போசகர்:**

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

***ஆலோசகர்கள்:***

திரு.எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை

கலாநிதி பா.தனபாலன்

திருமதி.செ.சிவபாதம்

உப பீடாதிபதிகள்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

***ஆசிரியர் குழு:***

திரு.சி.முகுந்தன்

திரு.ம.நிரேஸ்குமார்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்

***வெளியீடு:***


யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்

021 223 0036

Jaffnancoe@hotmail.com

www.jncoe.net


**ஆசிரியர்கள் எண்ணத்திலிருந்து**

குருதீபம் 2வது செய்திமடல் வெளி வருவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்கள்! தரமான ஆசிரியர்களுக்கு தரமான ஆசிரியர் கல்வி! எனும் அடிப்படை விதிக்கமைய ஆசிரிய மாணவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்துவதே எமது பிரதான நோக்கமாகும். ஆதரவளித்த அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். குருதீபம் தொடர்ந்தும் ஒளி வீசும்.

## President's Message

I feel very happy to forward my message to the 2nd newsletter 'Gurutheepam' of Jaffna National College of Education. The purpose of publishing such newsletter is to provide opportunities for the student teachers to enhance their creative talents and to expose the college programs to the society. It also will be helpful for the inculcation of value and ethical practice among student teachers while cultivating their reading habits. I wish the contributors best of luck for their future endeavors too.

**Mr.S.Paramanantham**

## குருதீபம் செய்தி மடலுக்கான இலட்சினை



குருதீபம் செய்தி மடலுக்கான இலட்சினை வடிவமைக்கும் போட்டி மாணவ ஆசியர்களிடையே நடத்தப்பட்டது. போட்டியில் சித்திரத் துறையைச் சேர்ந்த செல்வன் அ. நித்தியபவன் வெற்றி பெற்றுள்ளார். வெற்றி பெற்ற மாணவ ஆசிரியரைப் பாராட்டுவதுடன் போட்டியில் ஆர்வத்துடன் பங்கு பற்றிய ஏனைய மாணவ ஆசிரியர்களுக்கும் குருதீபம் தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது. தெரிவு செய்யப்பட்ட இச்சின்னமானது தொடர்ந்தும் குருதீபம் செய்திமடலை அலங்கரிக்கும்.

## 19வது கல்லூரி தினம் - மே 02, 2019

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பத்தொன்பதாவது கல்லூரி தினம் மே 02ம் திகதி கல்லூரியின் பீடாதிபதி திருவாளர் சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் காலையில் நல்லூர் முருகன் ஆலயத்திலும், மாலையில் கல்லூரியில் அமைந்துள்ள வித்தக விநாயகர் ஆலயத்திலும், கிறிஸ்தவ தேவாலயத்திலும் விசேட வழிபாடுகள் இடம் பெற்றன. அத்துடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் செய்திமடலான குருதீபம் முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.





**குருதீபம் செய்தி மடல் வெளியீடு**

கல்லூரி சுற்றாடலை செழுமைப்படுத்திப் பாதுகாக்கும் நோக்கத்துடன் கல்வியியற் கல்லூரி வளாகத்தில் மரங்கள் நாட்டப்பட்டன. அதனைத் தொடர்ந்து கல்லூரிச் சமூகத்தினர் அனைவருக்கும் தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.





**மரம் நாட்டலும் விரிவுரையாளர்கள் கல்லூரிக்கு அன்பளிப்பு வழங்கலும்**


This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.06.2019

## சேவையாளர் அறிமுகம்



கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நிறுவுனர் மற்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி ஆகிய பெருமைகளுக்கு உரியவராவார். மிகவும் இக்கட்டான நாட்டுச் சூழ்நிலையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை உருவாக்கி வளர்த்தெடுத்த பெருமை இவருக்கே உரியதாகும்.02.05.2000 தொடக்கம் 20.09.2006 வரை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக அளப்பரிய சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

## நமது சூழல் நாமே பொறுப்பு செயற்திட்டம்





‘ நமது சூழல் நாமே பொறுப்பு’ என்னும் தொனிப் பொருளுடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட செயற்திட்டமொன்று மாணவ ஆசிரியர்களினால் 07.05.2019 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு நாளும் கல்லூரியின் அனைத்து மாணவ ஆசிரியர்களும் தமது காலை நேர உடற்பயிற்சியைத் தொடர்ந்து 15 நிமிடங்கள் தாம் வசிக்கின்ற சூழலை துப்பரவாக்கும் பணிகளில் ஈடுபடுகின்றனர். கல்லூரியின் பீடாதிபதியின் வழிகாட்டலில் அனைத்து விரிவுரையாளர்களின் ஒத்துழைப்புடனும் இச்செயற்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

## கல்வி அமைச்சின் உயரதிகாரி திரு.சு.முரளிதரன் கல்வியியற் கல்லூரிக்கு விஜயம்



கல்வி அமைச்சின் உயரதிகாரி திரு சு.முரளிதரன் அவர்கள் கடந்த 09.05.2019 வியாழக்கிழமை அன்று கல்லூரிக்கு வருகை தந்திருந்தார். யாழ்ப்பாண மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களை ஆசிரியர்களாக உள்ளீர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகளை நடாத்தும் கல்வி அமைச்சின் குழுவிற்கு தலைமை தாங்கி யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த அவர் குறிப்பிட்ட தினத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்களையும் சந்தித்தார். அவர் தனது கருத்துரையில் பல்லின சமூகத்தினரும் பயிற்சி பெறுகின்ற தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மாணவ ஆசிரியர்கள் உயர்ந்த ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றி நடக்க வேண்டுமென தெரிவித்திருந்தார்.

## திருக்கேதீச்சர ஆலயத்தில் சிறப்புற நடைபெற்ற யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாம் திருவிழா





கடந்த 10.05.2019 வெள்ளிக்கிழமை அன்று மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் இரண்டாம் திருவிழா யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினரால் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. விரிவுரையாளர் திரு மா.பிரபாகரன் தலைமையிலான குழுவினர் இப்பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாக மாணவ ஆசிரியர்கள் இம்முறை திருவிழா நிகழ்வுகளில் கலந்து கொள்வது தவிர்க்கப்பட்டிருந்தது.

## மாணவ ஆசிரியர்களின் மொழிவிருத்திக்கான செயற்திட்டங்கள்

மாணவ ஆசிரியர்களின் மொழிவிருத்திக்கான விசேட செயற்திட்டங்கள் ஒவ்வொரு வாரமும் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் மாணவ ஆசிரியர்களினால் நடாத்தப்படுகின்றது. செவ்வாய்க் கிழமைகளில் ஆங்கில மொழிவிருத்திக்கான செயற்திட்டமும் வியாழக் கிழமைகளில் சிங்கள மொழிவிருத்திக்கான செயற்திட்டமும் கல்லூரியின் பீடாதிபதி அவர்களின் வழிகாட்டலில் ஆங்கில மற்றும் சிங்கள மொழிப் பாடங்களுக்கான விரிவுரையாளர்களின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டு வருகின்றது. இச்செயற்திட்டங்கள் மாணவ ஆசிரியர்களுக்கு நிறைவான பயன் தருவனவாக அமைந்துள்ளன.

## விரிவுரையாளர்களுக்கான திறன் பலகைப் பயன்பாடு (Interactive board) தொடர்பான பயிற்சிச் செயலமர்வு



விரிவுரையாளர்கள் தமது கற்பித்தல் நடவடிக்கைகளின் போது திறன் பலகையைப் பயன்படுத்துவதனூடாக மாணவ ஆசிரியர்கள் திறன் பலகையைப் பயன்படுத்தும் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்துடன் திறன் பலகைப் பயன்பாடு தொடர்பான பயிற்சிச் செயலமர்வு விரிவுரையாளர்களுக்கு நடாத்தப்பட்டது. ஏப்ரல் மாதம் 26ம் திகதி மற்றும் மே மாதம் 07,08,09ம் திகதிகளில் நான்கு தொகுதிகளாக இப்பயிற்சிச் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. வளவாளர்களாக திரு.நா.அம்பிகைபாகன், திரு.பொ.விஜயகுமாரன், திரு.வே.நந்தகுமார் மற்றும் திரு.ம.நிரேஸ்குமார் ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர். விரிவுரையாளர்களுக்கு இச்செயலமர்வு மிகவும் பயனுடையதாக அமைந்திருந்தது.

This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.06.2019

## பேராசிரியர் க.கைலாசபதி ஞாபகார்த்த நினைவுப் பேருரை 2019





பேராசிரியர் க.கைலாசபதி ஞாபகார்த்த நினைவுப் பேருரை கடந்த 15.05.2019 புதன்கிழமை கல்லூரியின் பீடாதிபதியின் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.ஆ.நித்திலவர்ணன் ‘இருபத்தியோராம் நூற்றாண்டு ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகள் மற்றும் திறன்கள்’ என்னும் தலைப்பில் நினைவுப் பேருரையாற்றினார்.



நினைவுப் பேருரையில் பங்கு பற்றியவர்களில் ஒரு தொகுதியினர்

## வெசாக் வார சிறப்பு நிகழ்ச்சிகள்





வெசாக் கூடு அமைத்தல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம்

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைவாக வெசாக் வாரமானது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 15.05.2019 தொடக்கம் 21.05.2019 வரை சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. முதலாம் நாள் நிகழ்வாக மாணவ ஆசிரியர்களிடையே வெசாக் கூடு அமைத்தல் தொடர்பான போட்டி நடாத்தப்பட்டது. ஒவ்வொரு கற்கைநெறியைச் சேர்ந்த மாணவ ஆசிரியர்களும் பிரிவு ரீதியாக இப்போட்டியில் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் நிகழ்வாக “ நிலைபேறான சூழலும் சமயமும்” என்னும் தொனிப்பொருளில் கருத்துப் பகிர்வு நடைபெற்றது. கல்லூரியின் பீடாதிபதி மற்றும் மாணவ ஆசிரியர்களான செல்விகள் எம்.சிவகேமா, ஜீ.சுபாஷினி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். நிறைவுநாள் நிகழ்ச்சிகள் 21.05.2019 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அன்றைய தினம் வெசாக் கூடு அமைத்தல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ ஆசிரியர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

## நிலம் சார்ந்த நீர் மாசுபடுதலைத் தடுக்கும் செயற்திட்டம்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் ‘ நிலம் சார்ந்த நீர் மாசுபடுதலை தடுக்கும் செயற்திட்டம்’ என்னும் தொனிப்பொருளிலான கருத்துப் பகிர்வு 16.05.2019 வியாழக் கிழமை காலை 10.30 தொடக்கம் 12.30 வரை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. வளவாளராக அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் திரு எஸ்.ரவி அவர்கள் கலந்து அரிய பல கருத்துக்களை வழங்கினார். மாணவ ஆசிரியர்கள் அனைவரும் இச்செயலமர்வில் பங்குபற்றிப் பயன் பெற்றனர்.

## செயற்பாட்டுத்திட்டம் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல்





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய கல்வியியலாளர்களிடையே செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல்கள் கல்லூரியின் பீடாதிபதியின் தலைமையில் கல்லூரியின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த 16.05.2019 வியாழக்கிழமை மற்றும் 31.05.2019 வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்கள் நடைபெற்றன. கல்லூரியின் கல்வியியலாளர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றிக் கருத்துக்களைப் பகிர்ந்து பயன் பெற்றனர்.

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இப்தார் நிகழ்ச்சி





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த இப்தார் நிகழ்ச்சி 25.05.2019 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பீடாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இஸ்லாமிய மன்றப் பொறுப்பு விரிவுரையாளர்களின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக தமிழ் முஸ்லிம் ஒற்றுமைக்கான அமைப்பின் தலைவர் எம்.எம்.நிபாஹிர் அவர்களும் சிறப்பு அதிதியாக ஏ.எம்.ரஸீம் மௌலவி அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். மதங்களுக்கிடையிலான ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் இந்நிகழ்ச்சியானது கல்லூரியில் பயிலும் இஸ்லாமிய மாணவ ஆசிரியர்களினால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.06.2019

## சுற்றாடல் மன்றத்தின் சித்திரைச் சிரமதானம்



சுற்றாடல் மன்றத்தினரால் மாதாந்தம் நடத்தப்படும் சிரமதான செயற்பாடுகள் வரிசையில் சித்திரைச் சிரமதானம் அண்மையில் நடைபெற்றது. கல்லூரியின் பீடாதிபதி மற்றும் சுற்றாடல் மன்றப் பொறுப்பு விரிவுரையாளர்களின் வழிகாட்டலில் ஏனைய விரிவுரையாளர்கள், மாணவ ஆசிரியர்களினால் இச்சிரமதானம் வெகு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. அனைத்து மாணவ ஆசிரியர்களும் மிகவும் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் தமது சுற்றாடலைத் துப்பரவாக்கித் தூய்மைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது,

## சுற்றாடல் மன்றத்தினரின் சூழல் நேயச் செயற்பாடு





சுற்றாடல் மன்றத்தினரால் 01.06.2019 சனிக்கிழமை மாமரங்களைக் கவ்வாது வெட்டுதல் மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்திக் கூட்டெரு தயாரித்தல் ஆகிய இரண்டு செயற்திட்டங்கள் நடாத்தப்பட்டன. கல்லூரியின் பீடாதிபதியின் வழிகாட்டலில் சுற்றாடல் மன்றப் பொறுப்பு விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இச்செயற்திட்டங்கள் இரண்டும் மேற்கொள்ளப்பட்டன. இச்செயற்பாட்டில் வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி அஞ்சனா ஸ்ரீரங்கன் அவர்களும் விவசாயப் போதனாசிரியர்களான செல்விகள் சரண்யா நகுலேஸ்வரன், மதுபாஜினி அழகேசன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## மறவோம் ஆசிரியரே…!

கட்டைச் சுவரின் எல்லைக்குள்
கட்டியெழுப்பிய சிறையினுள்ளே
சிறைப்படுத்த முடியாத
எதிப்பார்ப்புகளின் சொந்தக்காரன் நான்!
என்றுமே தூக்கப்படாத
கைகளைக் கொண்ட பின்வரிசைக்கு
அதிகாரத்தைப் பரப்பும்
பதக்கம் பெறாத தலைவன் நான்!
முன்னேற்ற அறிக்கை மீது
சிவப்பு பச்சை மஞ்சள் வர்ணம்
எல்லோரும் பெற்ற பின்னர்
கறுப்புப் புள்ளிகளுக்கு உரிமை கோரும்
அறிவில்லாதவன் அல்லவா நான்!
வாழ்வில் அன்றைய நாள்
என்னால் மறக்கப்பட முடியாதது ஆசிரியரே!
எங்கள் மீது கவனம் செலுத்தி நீங்கள்
கற்பிக்கத் தொடங்கிய நாள்!
அன்றிலிருந்து ஒவ்வொருநாளும் எமக்குப் பொன்னானநாளே!
உயிருள்ள வரைக்கும் மறவோம் ஆசிரியரே…!

எஸ்.செந்தூரன், கணிதப்பிரிவு (B)

## Dear Mom



My mom keeps a garden,
A garden of life,
She plants all lovable things,
All for me, she thinks.

Her love is like an ocean,
She hates diamonds,
Thinking their
Resemblance to my tears.

You are the sweetest dream in my sleep,
You are a soothing melody when I weep,
You are the cushion during my leap,
You are the symbol of love forever.

I am so blessed to have you in my life,
Offering me advices whenever I strive,
Keeping me always protected,
That’s what keeps you safe.
I adore you more than any deity.

You always have my respect and loyalty.
You are my pride and joy.
You are my inimitable gift.

Miss NagarasaThuvaraka, English (1st year)

## ஊக்குவித்தல் (Motivation)

- ஊக்குவித்தல் ஒரு உளவியற் செயற்பாடாகும்.
- மாணவர்களின் நடத்தைக் கோலங்களை அறிவதன் மூலமே பொருத்தமான ஊக்குவித்தலைப் பிரயோகிக்கலாம்.
- ஊக்குவித்தல் மூலம் செயற்பாடுகளுக்கான விசேட சக்தியைப் பெறுவதோடு மாணவரிடமுள்ள பொதுவான திறமைகளை வெளிக்கொணரவும் முடியும்.
- கற்பித்தலுக்கான ஊக்குவித்தல் நுட்பங்களைப் பிரயோகிக்கும் போது அதனது நன்மை, தீமை பற்றியும் அதனை பிரயோகிப்பது பற்றியும் ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும்.
- தூண்டுதல் உடல் நிலைக்கும் உளவியல் தேவைகளுக்கும் ஏற்ப மாறுபடுகின்றது. எனவே கற்றலுக்கான தூண்டுதலில் மாணவர்களின் முதிர்ச்சி தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டும்.
- நுண்ணறிவு கூடிய மாணவர்களை அவர்களுக்கு ஏற்ற வகையில் ஊக்குவிக்க வேண்டும்.
- ஊக்குவிக்கும் போது மாணவர்களுக்கு தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். எனினும் அது பாரிய தன்னம்பிக்கையாக(Over confident) அமையுமளவிற்கு ஆசிரியரின் ஊக்குவித்தல் அமையக் கூடாது. ஏனெனில் மிகையான தன்னம்பிக்கை கற்றலில் கவனத்தைக் குறைத்து விடவும் கூடும்.

கி.கு.ஜெனுசியா, விஞ்ஞானப்பிரிவு (A)

This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.06.2019